PR.NO: 14.                                                    04.08.2017

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு பொதுக்கட்டிடங்கள் (உரிமங்கள்) சட்டம் 1965-ன் படி பொதுக் கட்டிடங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள கீழ்க்காணும் கட்டிடங்களுக்கு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு கட்டிடத்திற்கான உரிமம் பெறவேண்டும்.

1. பள்ளி, கல்லூரி, பல்க
2. லைக்கழகம் மற்றும் பிற கல்வி நிறுவனங்கள் (தனியார் பயிற்சிப் பள்ளி,கல்லூரி உட்பட).
3. தங்கும் விடுதிகள் (சிறியவர் / பெரியவர்).
4. நூலகம்.
5. மருத்துவமனைகள், நர்சிங்ஹோம், டிஸ்பென்சரி, கிளினிக் மற்றும் மகப்பேறு மையங்கள்.
6. பொழுதுபோக்கு மையங்கள்(கிளப்),சங்க கட்டிடங்கள், திரையரங்குகள்.
7. ஹோட்டல், லாட்ஜ், தங்கும் விடுதிகள், உணவகங்கள்.
8. சத்திரம், வணிகவளாகங்கள்.
9. திருமண மண்டபங்கள், சமுதாய நலக்கூடங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்கள், விருந்துகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கான பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டிடங்கள்.
10. பொதுமக்கள் பயன்படுத்தும் மதரீதியான வழிபாட்டு மையங்கள்
11. பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள அனைத்து அரசு, தனியார் கட்டிடங்கள்.

## பொதுக் கட்டிடங்களுக்கு உரிமம் பெறுவதற்கான வழிமுறைகள் வருமாறு:

அ) மேலே வரையறை செய்யப்பட்ட பொதுக்கட்டிடங்களுக்கு கட்டிட உரிமம் பெறுவதற்கு தமிழ்நாடு பொதுக்கட்டிடங்கள் (உரிமங்கள்) சட்டத்தின்படி பொதுக்கட்டிடங்களின் உரிமையாளர்கள், குத்தகைதாரர், மேலாளர், முதல்வர், செயலாளர், மேற்பார்வையாளர் என கட்டிடத்திற்கு பொறுப்புள்ளவர்கள் படிவம்-A விண்ணப்பத்துடன் உரிமக்கட்டணம் செலுத்தியதற்கான அசல் செலுத்துச் சீட்டு, அரசு அங்கீகாரம் பெற்ற பொறியாளரிடம் பெறப்பட்ட கட்டிட உறுதி தன்மைக்கான சான்று (படிவம் B), அங்கீகரிக்கப்பட்ட கட்டிட

வரைபடம், மின் இணைப்பு பெற்ற ஆணை நகல், உள்ளாட்சி நிர்வாகத்திடம் வரி செலுத்தியதற்கான ரசீது ஆகியவற்றுடன் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களிடம் ஆகஸட் மாதம் 10-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆ)மேற்படி கட்டிட உரிமம் பெற விண்ணப்பித்த பின்னர் தீயணைப்புத் துறை மற்றும் சுகாதாரத் துறையிடம் தடையில்லாச்சான்று பெற வேண்டியது அவசியமாகும்.

ஏற்கனவே உரிமம் பெற்றுள்ள நபர்கள் உரிய காலக்கெடுவிற்குள் அதனைப் புதுப்பித்து நடப்பில் வைத்திருக்க வேண்டும். உரிய உரிமம் பெறாமல் எந்த கட்டிடத்தையும் பொதுக் கட்டிடமாக பயன்படுத்தக் கூடாது. உரிமம் பெறாமலோ, காலாவதியான உரிமத்துடனோ பொதுக்கட்டிடங்கள் செயல்பட்டு வந்தால் அக்கட்டிடம் தடை செய்யப்படுவதோடு சம்மந்தப்பட்ட உரிமையாளர்கள்,பொறுப்பாளர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துக் கொள்கிறார். 10.08.2017க்குள் விண்ணப்பிக்காவிடில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒம்/- சந்தீப்நந்தூரி.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

/உண்மை நகல்/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருநெல்வேலி.

சி
03/08/17

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.